DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No: C.C. No. 21/14

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 1 |
| Name | : | Malaiarasan |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.19

முதல் விசாரணை:

நான் தற்போது நல்லுத்தேவன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சிகள் 2 முதல் 9 வரையிலானவர்களைத் தெரியும். விபத்தில் இறந்த செல்வக்குமார் என்பவர் என் உடன்பிறந்த சகோதரர். 2013ம் ஆண்டு ஒருநாள் நானும் என் சித்தப்பா மகன் மாசாணமும் உசிலம்பட்டிக்கு விசேசத்திற்கு வந்து விட்டு அங்கிருந்து மதியம் சுமார் 1 மணி அளவில் ஒரு இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊருக்கு பேரையூர் ரோட்டில் இடது ஓரமாக சென்று கொண்டிருந்தோம். அதே விசேசத்திற்கு வந்திருந்த என் தம்பி செல்வக்குமாரும், பிரபாகரனும் எங்களுக்கு முன்னால் பிரபாகரன் ஓட்ட என் தம்பி பின்னால் உட்கார்ந்து சாலையின் இடதுஓரமாக சென்று கொண்டிருந்தார்கள். பண்ணைப்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு முன்பு சென்று கொண்டிருந்தபோது ஈச்சர் வேன் ஒன்று தெற்கில் இருந்து வடக்காக வேகமாக வந்து என் தம்பி உட்கார்ந்திருந்த பிரபாகரன் ஓட்டிய பைக்கில் மோதிவிட்டது. வண்டி மோதியதில் அவர்கள் இருவரும் கீழே விழுந்து விட்டனர். பிரபாகரனுக்கு காலில் காயம் ஏற்பட்டது. என் தம்பிக்கு முகம், கால், கைகளில் அதிகமான காயம் ஏற்பட்டது. உடனே அவர்களை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு பைக்கில்

வைத்து கொண்டு சென்று சேர்த்தோம். என் தம்பிக்கு உடல்நிலை மோசமாக இருப்பதாக கூறியதால் மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக 108 ஆம்புலன்சில் கொண்டு சென்றபோது மதுரையில் டிவிஎஸ் அருகே வைத்து என் தம்பி இறந்து விட்டார். அப்படியே மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவருக்கு பிரேத பரிசோதனை செய்து மறுநாள் எங்களிடம் ஒப்படைத்தார்கள். நான் உசிலம்பட்டி நகர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அதசாஆ 1. ஈச்சர் வண்டியின் ஓட்டுனரை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். சம்பவ இடத்தில் விபத்து நடந்த பதற்றத்தில் ஓட்டுனரை சரியாக நான் பார்க்கவில்லை. பிரபாகரன் சுமார் 15. 20 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

பண்ணைப்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கு வடக்கே அசுவமாநதி பாலம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு வடக்கே அய்யனார் கோவிலும் எஸ்ஓஆர் பெட்ரோல் பல்க்கும் உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊர் நல்லுத்தேவன்பட்டி கண்மாய்க்கு தெற்கே உள்ளது. சம்பவ இடத்தில் பண்ணைப்பட்டி விலக்கில் இருந்து வி.பெருமாள்பட்டி செல்லும் தார் ரோடு உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் என் சித்தப்பா ராமையா என்ப்வர் நல்லுத்தேவன் பட்டியில் 10.30 முதல் 12.00 மணிக்குள் விசேசம் வைத்திருந்தார். எனக்கு எழுதப் படிக்கத் தெரியும். என் தம்பிக்கு சொந்தமாக இருசக்கர வாகனம் இல்லை. எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. சம்பவத்தன்றுதான் என் சித்தப்பா வீட்டு விசேசம் நடந்தது. உசிலம்பட்டிக்கு சாமான்கள் வாங்குவதற்காக பண்ணைப்பட்டியில் இருந்து பிரபாகரனும் என் தம்பியும் எப்போது உசிலம்பட்டிக்கு வந்தார்கள் என்று தெரியாது. நான் எங்கள் ஊரில் இருந்து 12.00 மணிக்கு கிளம்பினேன். என் தம்பியை உசிலம்பட்டியில் அரசு மருத்துவமனைக்கு அருகே வைத்து இலை வாங்குவதற்காக வந்திருந்தவரை சந்தித்தேன். அந்த இடத்தில் இருந்து 12.45 மணி அளவில் நாங்கள் சேர்ந்தே கிளம்பினோம். எங்கள் ஊர் அரசு மருத்துவமனையில் இருந்து 4 கிமீட்டர் தூரம் இருக்கும். 15 நிமிடங்க்ளில் சென்றுவிடலாம். நானும் என் தம்பி சென்ற வாகனமும் 100 மீட்டர் இடைவெளியில் சென்றோம். போகும்போது டிஇஎல்சி பள்ளி எதிர்புறம் உள்ள டீக்கடையில் நாங்கள் நான்குபேரும் ஒன்றாக அமர்ந்து தேநீர் அருந்தினோம். அங்கிருந்தும் என் தம்பி சென்ற வாகனம் தான் முதலில் சுமார் 1.15 மணி அளவில் புறப்பட்டது. சம்பவ இடத்திற்கும் டிஇஎல்சி பள்ளிக்கும் இடையே ஒன்னரை கிமீட்டர் தூரம் இருக்கும். சம்பவ சாலை தேனி மதுரை சாலைபோல்

தேசிய நெடுஞ்சாலை அல்ல என்றால் சரிதான். என் தம்பிக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது. பிரபாகரன் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளார். டிஇஎல்சி பள்ளியில் இருந்தும் நாங்கள் 100 மீட்டர் இடைவெளியில்தான் சென்றோம். அரசு மருத்துவமனைக்கும் தேநீர் கடைக்கும் இடையே 100 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தென்புறத்தில் நல்லுத்தேவன்பட்டி கண்மாய் ஏற்றமும், மேல்புறத்தில் பண்ணைப்பட்டி செல்லும் சாலையும் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் அந்த இடத்திற்கு போகும்போது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சம்பவத்தைப் பார்த்தேன்.என் தம்பியும் பிரபாகரனும் தார் ரோட்டில் கிடந்தார்கள். இருசக்கர வாகனம் தார் சாலையின் கிழக்குப்பக்கம் இருந்தது. சம்பவ இடத்தில் 20, 30 பேர்கள் கூடியிருந்தார்கள். நாங்க்ள் தார் ரோட்டில் தான் சென்றோம். 100 மீட்டர் முன்னால் செல்லும் நபர் சாலையில் எந்தப்பகுதியில் சென்றார் என்று கணிக்க முடியாது என்றால் சரிதான். என் தம்பியின் இறப்பிற்கு இழப்பீடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சம்பவத்தன்று மாலை 4, 5.00 மணி போல் நானே காவல் நிலையம் சென்று என் கைப்பட புகார் எழுதிக் கொடுத்தேன். புகாரில் என் தம்பி மாசாணம் சாட்சி கையொப்பம் செய்தார். தெற்கில் இருந்து வடக்காக வரும் நபருக்கு மேற்குப்புறம்தான் இடதுபுறம் என்றால் சரிதான். அதேபோன்று தெற்குநோக்கி செல்பவர்களுக்கு கிழக்குப்புறம் தான் இடதுபுறம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை விட ஈச்சர் வாகனம் 5, 6 மடங்கு அகலமானது என்றால் சரிதான். புகாரில் நானும் பிரபாகரனும் 100 அடி இடைவெளியில் சென்றதாக சொல்லியுள்ளேன். என் தம்பி விசேச வீட்டிற்கு இலை பற்றாக்குறை ஏற்பட்டதால் வாங்க வந்தார். நான் சொந்த சாமான்கள் வாங்க வந்தேன். நான் டிஇஎல்சி பள்ளி அருகே சொந்தமாக வாடகை கார் வைத்துள்ளேன். நான் சொல்வதுபோன்று சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் என் உடன்பிறந்த சகோதரர் என்பதால் விபத்து பற்றி கேள்விப்பட்டு வந்து அவருக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பின்னிட்டு போலிசார் சொன்னதன் அடிப்படையில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் கொடுக்கும்போது ஈச்சர் வாகனத்தின் ஓட்டுனர் பெயரை அவரிடமே கேட்டு போலிசார் எழுதிக் கொண்டனர். நான் அவர் பெயர் எழுதவில்லை.

ம.வி.இல்லை.

/Sd./  Malaiarasan

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No: C.C. No. 21/14

Sessions

| | | |
|---|---|---|
| Deposition of witness of | : | P W - 2 |
| Name | : | Prabakaran |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.19

முதல் விசாரணை:

நான் தற்போது நல்லுத்தேவன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா1ஐ தெரியும். சாட்சிகள் 3 முதல் 9 வரையிலானவர்களைத் தெரியும். விபத்தில் இறந்த செல்வக்குமார் எனக்கு நண்பர். எங்கள் ஊர்க்காரர். 2013ம் ஆண்டு ஒருநாள் மதியம் எங்கள் ஊரில் ராமையா என்பவர் வீட்டில் விசேசம் வைத்திருந்ததால் பொருள் வாங்க வேண்டும் என்று நானும் செல்வக்குமாரும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் உசிலம்பட்டிக்கு வந்து பொருட்கள் வாங்கிவிட்டு 1, 1.30 மணி அளவில் நானும் செல்வக்குமார் ஒரு வண்டியிலும் அசா1ம் மாசாணமும் ஒரு வண்டியிலும் எங்கள் ஊரை நோக்கி சென்றோம். என்னுடைய வண்டியை நான்தான் ஓட்டிச் சென்றேன். பேரையூர் ரோட்டில் பண்ணைப்பட்டி விலக்கு அருகே நான் சாலையின் இடதுஓரமாக வண்டியை ஓட்டிச் செல்லும்போது எதிரே கேரளாவில் இருந்து வந்த ஈச்சர் வேன் திருப்பத்தில் நல்ல வேகமாக ஆரன் சத்தம் இல்லாமல் எங்கள் ஓரத்திலேயே வந்து எங்க்ள்வண்டியில் மோதிவிட்டது. அதில் எனக்கு வலது காலில் அடிபட்டது. உடம்பின் இடதுபாகம் முழுவதும் அடிபட்டது. செல்வக்குமாருக்கு நெற்றி பொட்டில் அடிபட்டது. நாங்கள் அடிபட்டவுடன் இருவரும் மயக்கமாகிவிட்டோம்.

எங்களை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்துள்ளனர். அங்கிருந்து செல்வக்குமாரை மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் உசிலம்பட்டி அரசு மருத்துமனையில் இருந்து ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சேர்ந்து விட்டு பிரீத்தி மருத்துவமனையில் ஒருமாதம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். ஈச்சர் வண்டியை ஓட்டுவந்த நபரை பார்க்கவில்லை. வண்டி நேரடியாக மோதியதால் ஓட்டுனரை பார்க்க முடியவில்லை. அந்த வண்டி கேரளாவில் பதியப்பட்டதாகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

நான் பட்டயப்படிப்பு படித்துள்ளேன். எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. விபத்திற்கு 8 மாதங்களுக்கு முன்புதான் அந்த வண்டியை வாங்கினேன். உசிலம்பட்டியில் இருந்து எங்கள் ஊர் 4 கிமீட்டர் தூரம் உள்ளது. விபத்து நடந்த இடத்திற்கும் எங்கள் ஊருக்கும் 1 கிமீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடந்த இடத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அய்யனார் கோவில, அசுவமாநதி பாலம், எஸ்ஆேர் பெட்ரோல் பல்க் ஆகியவை வடக்கே உள்ளன. மேற்கே பெருமாள்பட்டி செல்லும் பிரிவு சாலை உள்ளது. சம்பவ இடத்திற்கு தென்புறத்தில் நல்லுத்தேவன்பட்டி கண்மாய் உள்ளது. சம்பவ இடத்திற்கும் கண்மாய்க்கும 50 அடி தூரம் இருக்கும். தெற்கேயிருந்து வடக்கு நோக்கி வருபவருக்கு சம்பவ இடத்தில் சாலை கண்மாய் இறக்கம் என்றால் சரிதான். வடக்கில் இருந்து தெற்கே செல்பவர்களுக்கு சாலை ஏற்றம் என்றால் சரிதான். நானும் அசா1ம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை அருகே வைத்து சுமார் 12.45 மணி அளவில் சந்தித்தோம். டிஇஎல்சி பள்ளிக்கு அருகே நான்குபேரும் 1, 1.15 மணி அளவில் டீசாப்பிட்டோம். அந்த டீக்கடையில் இருந்து சம்பவ இடத்திற்கு 1 கிமீட்டர் தூரம் இருக்கும். அந்த சாலை ஒருவழிச் சாலை என்றால் சரிதான். அசா1 எங்களுக்கு பின்னால் எவ்வளவு தூரத்தில் வருகிறார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. ஈச்சர் வண்டியை அருகில் வந்த பிறகு பார்த்தேன். அதற்குள் வண்டி மோதிவிட்டது. நான் தூக்கி எறியப்பட்டு மயக்கமாகிவிட்டேன். எனக்கு ஏற்பட்ட காயத்துக்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மயக்கமானதால் அதற்குபின்பு என்ன நடந்தது என்று தெரியாது.

ம.வி.இல்லை.

/Sd./ Pr abakaran

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.